RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 328 | நவம்பர்.28 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## “தலைமை அழைத்தால் டெல்லி செல்வேன்” முதல்வர் மாற்றம் பற்றி சித்தராமையா தகவல்



பெங்களூரு: நவ.28-

கர்நாடகாவில் முதல்வர் மாற்றம் தொடர்பான சர்ச்சை அதிகரித்துள்ள நிலையில், ‘காங்கிரஸ் உயர் தலைமை அழைத்தால் டெல்லிக்குச் செல்வேன்’ என்று முதல்வர் சித்தராமையா கூறியுள்ளார்.

கர்நாடகாவில் காங்கிரஸ் அரசு பதவியேற்று நவம்பர் 20 அன்று தனது ஐந்தாண்டு பதவிக் காலத்தின் முதல் பாதியை கடந்தது. ஆட்சியின் முதல் இரண்டரை ஆண்டு காலம் சித்தராமையா முதல்வராகவும், அடுத்த இரண்டரை ஆண்டு காலம் டி.கே.சிவகுமார் முதல்வராகவும் இருப்பார்கள் என பேசப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. இதன் காரணமாக தற்போது சிவகுமாரை முதல்வராக்க வேண்டும் என அவரின் ஆதரவு எம்எல்ஏக்கள் டெல்லியில் காங்கிரஸ் தலைமைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய மல்லிகார்ஜுன கார்கே, “ நான் அனைவரையும் அழைத்து விவாதிப்பேன். ராகுல் காந்தியும் இந்த விவாதத்தில் இருப்பார். மற்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள். முதல்வர் மற்றும் துணை முதல்வரும் கலந்து கொள்வார்கள். இவர்கள் அனைவருடனும் கலந்துரையாடிய பிறகு முடிவு எடுக்கப்படும். உயர் தலைமைக்கு ஒரு குழு உள்ளது, நான் தனியாக இல்லை. முழு உயர் தலைமை குழுவும் விவாதித்து ஒரு முடிவை எடுக்கும்” என்று அவர் கூறினார்.

கார்கேவின் கருத்து குறித்து செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த சித்தராமையா, "உயர்நிலை தலைமை அழைத்தால் நான் டெல்லி செல்வேன்" என்று கூறினார்.

இருப்பினும், பெங்களூருவில் நடந்த செய்தியாளர் சந்திப்பின் போது முதல்வர் பதவி குறித்த கேள்விகளுக்கு கருத்து தெரிவிக்காமல் சித்தராமையா வழக்கம் போல் தனது பணிகளை தொடர்ந்தார். அப்போது அவர், மாநிலத்தில் அதிக மழையால் பாதிக்கப்பட்ட 14 லட்சம் ஹெக்டேர் பயிர் சேதத்திற்கு ரூ.1,033 கோடி நிவாரணத் தொகையை அறிவித்தார்.

## காவல் துறையில் உயர் அதிகாரிகளுக்கான பதவி உயர்வு பட்டியல் தயாரிக்கும் பணி தீவிரம்




சென்னை. நவ.28.-

சென்னை: தமிழக காவல் துறையில் உயர் போலீஸ் அதிகாரிகளுக்கான பதவி உயர்வு பட்டியல் தயாரிப்புப் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. மேலும், சட்டம்ஒழுங்கு பொறுப்பு டிஜிபியாக வெங்கடராமனே தொடர்கிறார்.

ஐபிஎஸ் அதிகாரிகளான சீமா அகர்வால், ராஜீவ் குமார், சந்தீப்ராய் ரத்தோர், அபய்குமார் சிங், வன்னிய பெருமாள், மகேஷ் குமார் அகர்வால், வெங்கடராமன், வினித் தேவ் வான்கடே, சஞ்சய் மாத்தூர் ஆகியோர் டிஜிபிக்களாக பல்வேறு பிரிவுகளில் பணிபுரிகின்றனர்.

தலைமை டிஜிபியான சட்டம்ஒழுங்கு டிஜிபியாக இருந்த சங்கர் ஜிவால் கடந்த ஆக.31ம் தேதி ஓய்வுபெற்ற நிலையில், புதிய சட்டம் ஒழுங்கு டிஜிபி இதுவரை நியமிக்கப்பட வில்லை. அதேநேரம் பொறுப்பு டிஜிபியாக நிர்வாகப் பிரிவில் இருந்த வெங்கடராமனை தமிழக அரசு நியமித்தது.

இந்நிலையில், நிரந்தர டிஜிபியாக சீனியாரிட்டியில் உள்ள சீமா அகர்வால், ராஜீவ் குமார், சந்தீப் ராய் ரத்தோர் ஆகியோரில் ஒருவரை நியமிக்க வேண்டும் என எதிர்க்கட்சி உள்பட பல்வேறு தரப்பிலிருந்தும் தொடர்ந்து அழுத்தம் தரப்பட்டு வருகிறது.

மேலும், இதுதொடர்பான வழக்கு நீதிமன்றத்திலும் நடந்து வருகிறது. ஆனால், தற்போது வரை இந்த விஷயத்தில் தமிழக அரசு மவுனம் காக்கிறது. இதற்கிடையே, அடுத்த பதவி உயர்வுக்கான போலீஸ் அதிகாரிகளின் பட்டியல் தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

அதாவது 1995ல் ஐபிஎஸ் ஆக தேர்வான கூடுதல் டிஜிபிக்களான டேவிட்சன் தேவாசீர்வாதம், சந்தீப் மித்தல், பாலநாக தேவி ஆகிய 3 பேரும் டிசம்பர் 31ம் தேதி அல்லது ஜனவரி முதல் தேதியில் டிஜிபியாக பதவி உயர்த்தப்பட உள்ளனர்.

அதோடு, ஐஜிக்களாக உள்ள அன்பு, பிரேம் ஆனந்த் சின்ஹா, தீபக் டாமோதர், செந்தில்குமார், அனிதா உசேன், நஜ்மல் ஹோடா, மகேந்திர குமார் ஆகிய 7 அதிகாரிகள் கூடுதல் டிஜிபிக்களாக பதவி உயர்வு பெற உள்ளனர். மேலும் 15 எஸ்.பிக்களும் டிஐஜி யாக பதவி உயர்வு பெற உள்ளனர்.

இதுதவிர, அடுத்த மாதம் முதல் வாரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள், எஸ்.பிக்கள் மாநாடு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாநாடு முடிந்தவுடன் 20க்கும் மேற்பட்ட போலீஸ் அதிகாரிகள் பணியிடம் மாற்றம் செய்யப்பட உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

அந்த பட்டியலும் தற்போது முழு வீச்சில் தயாராகி வருகிறது. அதேநேரம், நிரந்தர டிஜிபி விவகாரத்தில் அரசு அவசரம் காட்டாது; வெங்கடராமன் தொடர்ந்து டிஜிபியாக செயல்படுவார் என்று போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தங்கம் விலை சவரனுக்கு ரூ.240 குறைவு; ஒரு சவரன் ரூ.94,160

சென்னை:, நவ.28.-

சென்னையில் 22 காரட் ஆபரண தங்கம் விலை சவரனுக்கு ரூ.240 குறைந்து, ஒரு சவரன் ரூ.94,160க்கு விற்பனை ஆகிறது.

சர்வதேச நிலவரங்களால், நம் நாட்டில் தங்கம் விலையில் தொடர்ந்து ஏற்ற, இறக்க நிலை காணப்படுகிறது. தமிழகத்தில் நேற்று முன்தினம் (நவ.,25) ஆபரண தங்கம் கிராம், 11,720 ரூபாய்க்கும், சவரன், 93,760 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி கிராம், 174 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று (நவ.,26) தங்கம் விலை கிராமுக்கு, 80 ரூபாய் உயர்ந்து, 11,800 ரூபாய்க்கு விற்பனையானது. சவரனுக்கு, 640 ரூபாய் அதிகரித்து, 94,400 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

வெள்ளி கிராமுக்கு, 2 ரூபாய் உயர்ந்து, 176 ரூபாய்க்கு விற்பனையானது. இந்நிலையில் இன்று (நவ.,27) 22 காரட் ஆபரண தங்கம் விலை சவரனுக்கு ரூ.240 குறைந்து, ஒரு சவரன் ரூ.94,160க்கு விற்பனை ஆகிறது. கிராமுக்கு ரூ.30 குறைந்து ஒரு கிராம் ரூ.11,770க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வெள்ளி விலை கிராமிற்கு ரூ.4 உயர்ந்து ஒரு கிராம் ரூ.180க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## இந்திய விண்வெளி துறையில் புதிய வேலைவாய்ப்புகள் : பிரதமர் மோடி உறுதி




டெல்லி, நவ.28-

‘‘இந்திய விண்வெளி துறையில் சீர்திருத்தம் செய்யப்பட்டு உள்ளது. இதனால் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்,’’ என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஐதராபாத்தில், விண்வெளி தொழில்துறை தொடர்புடைய ஸ்டார்ட் அப் நிறுவனத்தை வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். அவர் இந்தியாவின் முதல் தனியாருக்கு சொந்தமான ராக்கெட் விக்ரம்1ஐ அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் அவர் பேசியதாவது:

விண்வெளி துறையில் சீர்திருத்தம் செய்யப்பட்டு உள்ளது. உலக முதலீட்டாளர்களுக்கு இந்திய விண்வெளித் துறை ஈர்ப்பு மிகுந்ததாக மாறி வருகிறது. நமது தனியார் துறையினரும் விண்வெளித் தொழில் துறையில் சிறப்பாக செயல்பட தொடங்கியுள்ளனர்.

இந்த துறையில் தொடங்கப்பட்டுள்ள 300க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் புதிய நம்பிக்கையைத் தருகின்றன. இதனால் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். பல ஆண்டுகளாக நமது விண்வெளி பயணத்திற்கு இஸ்ரோ உறுதுணையாக இருக்கிறது.


இந்திய இளைஞர்கள் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு அளிக்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு வாய்ப்பையும் புத்திசாலித்தனமாக பயன்படுத்துகின்றனர். விண்வெளி துறையை போல அணுசக்தி துறையிலும் வரலாற்று சிறப்பு மிக்க சீர்திருத்தங்களை செய்து வருகிறோம்.

வளர்ச்சி அடைந்த இந்தியாவை நோக்கிய பயணத்தில் முதலீட்டாளர்கள் பங்களிக்க வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

இன்று பிரதமர் மோடி தொடங்கி வைத்த ‘ஸ்கைரூட்’ ஸ்டார்ட்அப் நிறுவனம் இந்தியாவின் முன்னணி தனியார் விண்வெளி தொழில் துறை நிறுவனமாகும்.

## வட தமிழகத்தை நெருங்கும் ‘டித்வா’ புயல்: இன்றும், நாளையும் எந்தெந்த மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட்?





சென்னை, நவ.28-

தென்மேற்கு வங்கக் கடலில் டித்வா புயல் உருவாகி உள்ள நிலையில், தமிழகத்தில் இன்று (நவ.28) நான்கு மாவட்டங்களுக்கும், நாளை (நவ.29) ஆறு மாவட்டங்களுக்கும் ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தென்மண்டல வானிலை ஆய்வு மைய தலைவர் பி.அமுதா இன்று செய்தியாளர்களிடம் கூறியது:

“தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு இலங்கை பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, டித்வா புயலாக வலுப்பெற்று, தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளில் சென்னையிலிருந்து 700 கி.மீ தொலைவில் நிலைகொண்டுள்ளது.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து, தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில், வட தமிழகம் புதுச்சேரி மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளை 30ம் தேதி அதிகாலை நெருங்கும்.

இந்தப் புயலின் காரணமாக அடுத்த 4 தினங்களுக்கு மழைக்கான எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் டெல்டா மாவட்டங்களில், குறிப்பாக 5 மாவட்டங்களில் மிதமான மழை முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. ஏனைய மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யவும் வாய்ப்பு உள்ளது.

டெல்டாவில் 4 மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் கொடுக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம் ஆகிய 4 மாவட்டங்களுக்கு இன்று (நவ.28) அதி கனமழைக்கான ரெட் அலர்ட் கொடுக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மயிலாடுதுறை திருவாரூர், நாகப்பட்டினம் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை (நவ.29) ரெட் அலர்ட் கொடுக்கப்பட்டுள்ளது.

29ம் தேதி சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி,பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் அலர்ட் (மிக கனமழை) கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், திருச்சி, கரூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

30ம் தேதி திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

அடுத்த 5 நாட்களுக்கு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தவெக மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளராக செங்கோட்டையன் நியமனம்: விஜய் அறிவிப்பு



சென்னை, நவ.28-

தவெக உயர்மட்ட மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளராக செங்கோட்டையன் நியமனம் செய்யப்பட்டிருப்பதாக அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டின் இருபெரும் தலைவர்களோடு பயணித்தவர், தாம் சார்ந்திருந்த கட்சியின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியவர், அனைவரிடத்திலும் எளிமையோடும் அன்போடும் பண்போடும் பழகி, நன்மதிப்பைப் பெற்றவர் மூத்த அரசியல் தலைவர், முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்.

இன்று முதல் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்து, மக்களுக்கான அரசியலில் நம்மோடு பயணிக்க இருக்கிறார். அவரை வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

செங்கோட்டையன் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட 28 பேர் கொண்ட எனது கண்காணிப்பில் இயங்கும் தவெக உயர்மட்ட மாநில நிர்வாகக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளராக (Chief Coordinator) நியமிக்கப்படுகிறார்.

இவர் இந்தக் குழுவை வழிநடத்தி கட்சியின் அரசியல் செயல்பாடுகளை முன்னெடுக்க எனக்கு உறுதுணையாகச் செயல்படுவார். மேலும் கூடுதலாக ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்கு அமைப்புச் செயலாளராகவும் நியமிக்கப்படுகிறார்.

என்னோடும், கட்சியின் பொதுச் செயலாளர் என்.ஆனந்தோடும் கலந்தாலோசித்து கட்சிப் பணிகளை மேற்கண்ட இம்மாவட்டங்களில் மேற்கொள்வார்.

மேலும், அவருடன் தமிழக வெற்றிக் கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சத்தியபாமா, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் வெங்கடாசலம், முத்துக்கிருஷ்ணன் மற்றும் பிற புதிய உறுப்பினர்களையும் வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கட்சியின் நிர்வாகிகள் இவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்” என்று விஜய் தெரிவித்துள்ளார்.



# சிவகங்கை மேற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் உதயநிதி பிறந்தநாள் விழா

## ஒன்றிய அமைப்பாளர் திரவியம் ஏற்பாட்டில் முதியோர் இல்லத்தில் உணவு வழங்கினர்

சிவகங்கை, நவ.28-

சிவகங்கை மாவட்டம் திமுக வினர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு சிவகங்கை புறநகர் அன்னை முதியோர் இல்லத்தில் காலை இனிப்பு மற்றும் சிற்றுண்டி வழங்கி சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

மேற்கு ஒன்றிய திமுக ஒன்றிய செயலாளர் கண்டாங்கிபட்டி பெ. மந்தக் காளை அம்பலகாரர் அவர்களின் ஆலோசனையின் பேரில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் திரவியம் ஏற்பாட்டில் அவைத் தலைவர் பாலுச்சாமி, ஒன்றிய பொருளாளர், அரசு ஒப்பந்ததாரர் அர. உசிலம்பட்டி பாண்டியராஜா, மாவட்ட பிரதிநிதி அரசனூர் தியாகராஜன், மாவட்ட விவசாயத் தொழிலாளரணி துணை அமைப்பாளர், ஊராட்சி மேனாள் தலைவர் தமறாக்கி வடக்கு ரவி, மேற்கு ஒன்றிய ஐடி விங் அமைப்பாளர் தமறாக்கி அம்பலம் ஆகியோரது முன்னிலையில் முதியோருக்கு காலைச் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிரணி துணைத் தலைவர் மார்கரேட் கமலா பத்தினாதன், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் ஒமேகா திலகவதி கண்ணன், ஒன்றியக்கழக நிர்வாகிகள் மீனாட்சி புரம் ஊராட்சி மேனாள் துணைத்தலைவர் தமிழரசன் ,சமயத்துரை, பேச்சிமுத்து, மலைச்சாமி, போதிராஜா, காஞ்சிவனம், சம்பத் குமார், சந்தோஷ் குமார், கருணாகரன், மணிகண்டன், பொன்னுச்சாமி உள்ளிட்ட ஏராளமான திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# சிவகங்கை மானாமதுரை நகராட்சிகளில் மாற்றுத்திறனாளிகள் கவுன்சிலர்களாக பொறுப்பேற்றனர்

## சி. எம்.துரை ஆனந்த், எஸ். மாரியப்பன் கென்னடி பங்கேற்பு

சிவகங்கை, நவ.28-

சிவகங்கை நகராட்சியில் தனலெட்சுமி வெங்கடேஷ் எனற மாற்றுத்திறனாளி பெண் நகர்மன்றத் தலைவர், சி.எம்.துரை ஆனந்த், நகராட்சி ஆணையாளர் ஆகியோரது முன்னிலையில் முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார்...

சேர்மன் துரை ஆனந்த் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் நகர துணைச்செயலாளர் வீனஸ் இராமநாதன், காங்கிரஸ் நகர தலைவர் விஜயகுமார், கவுன்சிலர்கள் சுப.ஜெயகாந்தன், வீரகாளை, ஆறு.சரவணன், மகேஷ், துபாய் மு.காந்தி, சி. எல். சரவணன், தொகுதி ஐடி விங் சதீஷ் குமார், சண்முகராஜன், பாக்ய லெட்சுமி விஜயகுமார், வழக்கறிஞர் இராஜா அமுதன், அன்புமணி, மேஸ்ட்ரோ மதி, கமல், நிர்வாகிகள் செந்தில் வேல் பாண்டியன், இராமதாஸ், கார்த்திகேயன், கார்த்தி பிச்சை ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

இதேபோல் மானா மதுரை நகராட்சியில் புதிதாக கவுன்சிலராக புஷ்பராஜ் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சேர்மன் மாரியப்பன் கென்னடி, சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் , நகராட்சி அணையாளர், ஆகியோரது முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் நகர திமுக செயலாளர் க.பொன்னுச்சாமி, தொகுதி பார்வையாளர் கே.ஆர். என். போஸ் வைஸ் சேர்மன் பாலசுந்தரம் , ஒன்றிய செயலாளர்கள் துரை. இராஜாமணி, முத்துச்சாமி, கவுன்சிலர்கள் இந்துமதி திருமுருகன், சண்முகப்ரியா, காளீஸ்வரி அழகுசு ந்தரம், மன்னர் மன்னன், சோம. சதீஷ்குமார், செல்வகுமார் அழகர்சாமி, சிவாஜி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...




# “இந்திய தொழில்நுட்ப கழகம் (IIT) சென்னை மற்றும் சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி இனைந்து நடத்திய புதிய முறை மண் மாதிரி பரிசோதனை முகாம் - 2025”

காரைக்குடி, நவ.28-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, விசாலயன்கோட்டை, கலாம் கவி கிராமத்தில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பிலும், இந்திய தொழில்நுட்ப கழகம் (IIT) சென்னை இணைந்து, “விவசாயிகளுக்கான மண் மாதிரி பரிசோதனை செயல் விளக்கக் கூட்டம் - 2025” 25.11.2025 அன்று முதல் 27.11.2025 ஆகிய மூன்று நாட்கள் கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரியின் தாளாளர் முனைவர் சேது குமணன் தலைமையில் சென்னை இந்திய தொழில்நுட்ப கழகத்தின் வேதிப் பொறியியல் துறையின் தலைவர் முனைவர் புஷ்பவனம் அவரின் வழிகாட்டுதலில் துறையின் ஆராய்ச்சியாளர்கள்

நு கில்கமேஷ், சரண்ராஜ் அவர்களும் மண் சத்துக்களை பண்ணையிலிருந்தே எளிமையான கருவிகளைப் பயன்படுத்தி பரிசோதிப்பது எப்படி என்பதை செயல்முறை விளக்கமாக அறிமுகப்படுத்தினர். பயிர் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களை அறிவியல் முறையில் கணக்கிட்டு உரம் பயன்படுத்தும் முறைகளையும் விரிவாக விளக்கினர். கல்லூரியின் முதல்வர் முனைவர்

சு. முரளி கிருஷ்ணசாமி வழிகாட்டுதலில் இந்த முகாம் நடைபெற்றது மற்றும் துணை முதல்வர் முனைவர்.மா. விஷ்ணுப்பிரியா கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வினை மண்ணியல் துறை உதவிப் பேராசிரியர்கள் முனைவர் இரா. தனசேகர பாண்டியன் மற்றும் கா.மகேஷ்வரன் இருவரும் ஒருங்கிணைத்தனர்.

இந்த முகாமில் சுற்று வட்டார விவசாயிகள் சுமார் 50 பேர் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

# மஞ்சப்பை விருதுகள் பெற வருகின்ற 15.01.2026க்குள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை சமர்ப்பித்திடல் வேண்டும் மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தகவல்

சிவகங்கை, நவ.28-

ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றாகப் சுற்றுச் சுழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்கள் பயன்படுத்துவதை முன்மாதிரியான பங்களிப்பைச் செய்த 3 சிறந்த பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியவைகள் மஞ்சப்பை விருதுகள் பெற வருகின்ற 15.01.2026க்குள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை சமர்ப்பித்திடல் வேண்டும் மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தகவல்.



சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர், 2022-23 நிதியாண்டிற்கான மஞ்சப்பை விருதுகளை சட்டமன்றக் கூட்டத்தில் அறிவித்தை தொடர்ந்து “மீண்டும் மஞ்சப்பை” பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில், ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகள் மீதான தடையை திறம்பட செயல்படுத்தி, ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் (SUP) கை பைகள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றுகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்து, மஞ்சப்பை போன்ற பாரம்பரிய சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளின் பயன்பாட்டை மீண்டும் உயிர்ப்பித்து, தங்கள் வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மாற்றும் சிறந்த 3 பள்ளிகள், 3 கல்லூரிகள் மற்றும் 3 வணிக நிறுவனங்களுக்கு விருதுகள் மற்றும் முதல் பரிசாக ரூ. 10 லட்சம், இரண்டாம் பரிசாக ரூ. 5 லட்சம் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ. 3 லட்சம் பரிசு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் (TNPCB), ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றாகப் சுற்றுச் சுழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்கள் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும், தங்கள் வளாகங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் ஆக்கப்பூர்வமான முயற்சிகள் மூலம் தடையை அமல்படுத்துவதற்கும், வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மாற்றுவதற்கும் முன்மாதிரியான பங்களிப்பைச் செய்த மாவட்டத்தில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு மஞ்சப்பை விருதுகளை வழங்கப்படவுள்ளது.

அதன்படி, அதற்கான விண்ணப்பப் படிவங்கள் சிவகங்கை மாவட்ட ஆட்சியரின் இணையதளமான http://sivaganga..nic.in என்ற இணையதளத்தின் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், விண்ணப்ப படிவத்தில் உள்ள அனைத்து இணைப்புகளிலும் தனிநபர் / அமைப்புத் தலைவர் முறையாக கையெழுத்திட்டு, அந்த கையொப்பமிட்ட பிரதிகள் (கடின நகல்) இரண்டு மற்றும் குறுவட்டு (CD மென் நகல்) பிரதிகள் இரண்டினை வருகின்ற 15.01.2026ம் தேதிக்குள் விண்ணபத்தினை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தில் வழங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



# திமுக நன்மங்கலம் ஊராட்சி சார்பாக உதயநிதியின் பிறந்தநாள் விழா முன்னிட்டு அன்னதானம்

நன்மங்கலம், நவ.28-

செங்கல்பட்டு மாவட்டம் , சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம், நன்மங்கலம் ஊராட்சியில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வருமான, உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு (நவம்பர்: 27) ஊராட்சி மன்ற தலைவர் கிரி தலைமையில் கழகக் கொடியை ஏற்றி பிறந்தநாள் விழா நடைபெற்றது. சோழிங் கநல்லூர் எம்.எல்.ஏ., எஸ் .அரவிந்த்ரமேஷ் மற்றும் ஒன்றிய கழகச் செயலாளர்., கோவிலம்பாக்கம், ஜி வெங்கடேசன் விழாவை துவக்கி வைத்து பொதும க்களுக்கு கேக் வெட்டி, இனிப்புகள் கொடுத்து கொண்டாடினார்கள் மற்றும் அன்னதானம் வழங்கி சிறப்பாக நடைபெற்றது. உடன் திமுக கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.



# பழனி மதுவிலக்கு காவல் நிலையத்தில் இரண்டு கிலோ கஞ்சாவுடன் இரண்டு இளைஞர்கள் கைது

திண்டுக்கல், நவ.28-

திண்டுக்கல் மாவட்டம் பழனி மதுவிலக்கு காவல் நிலையத்தில் இரண்டு இளைஞர்கள் கஞ்சா வழக்கில் கைது.மதுரை மண்டலம் மத்திய நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர் மணிக்குமார் கிடைத்த ரகசிய தகவலின் படி எஸ் எஸ் ஐ சுப்பிரமணி. சின்ன மந்தையன். தலைமை காவலர். பாஸ்கரன், சதீஷ்குமார், மணிகண்டன். ராஜ் மோகன் ஆகியோர் செம்பட்டி கூத்தம்பட்டி பகுதியில் ரோந்து சென்ற பொழுது அரசு மேல்நிலைப்பள்ளி அருகே இருசக்கர வாகனத்தில் சந்தேகத்தின் படி நின்று கொண்டிருந்த பொழுது மூன்று இளைஞர்களை விசாரித்த பொழுது பொழுது முன்னுக்குப் பின் முரணாக பேசியதை தொடர்ந்து .ஹரிஷ் என்ற இளைஞர் மட்டும் தப்பித்து ஓடி விட்டார் மேற்கொண்டு இரண்டு இளைஞர்களை பிடித்து விசாரித்த பொழுது செம்பட்டி சொக்கலிங்கபுரம் கிழக்குப் தெருவை சேர்ந்த சுரேஷ் மகன் சந்தோஷ் குமார் வயது 20. சுரக்காபட்டியைச் சேர்ந்த சக்தி மகன் கணேஷ் 21. என்று தெரியவந்தது அவர்களிடமிருந்த இருசக்கர வாகனத்தில் 2 கிலோ மதிப்புள்ளான கஞ்சா பறிமுதல் செய்தனர் பின்பு. பழனி மதுவிலக்கு காவல் நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டனர். மேற்கொண்டு தப்பி உடைய ஹரிஷ்ன் அம்மா மகேஷ்வரியிடமிருந்து கஞ்சா வாங்கியதாக தகவல்

# தென்மேற்கு வங்கக்கடலில் புயல் உருவானது: வானிலை ஆய்வு மையம்

சென்னை, நவ.28-

தென்மேற்கு வங்கக் கடலில் மையம் கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெற்றது. தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடலோரப் பகுதிகளில் புயல் மையம். புயலானது வட தமிழ்நாட்டின் கடலோர பகுதிகளை நோக்கி நகரக்கூடும். அடுத்த 48 மணி நேரத்தில் வட தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோர பகுதியை நோக்கி நகரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலூர் ஆரணி ரோடு சங்கரன்பாளையம் அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனை உடனுறை அருள்மிகு சிவசுப்பிரமணிய சாமி திருக்குட நன்னீராட்டு கும்பாபிஷேகம்

வேலூர், நவ.28-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் மாநகரம், ஆரணி ரோடு, சங்கரன்பாளையம் கிராம தேவதை அருள்மிகு ஸ்ரீ கொண்டையம்மன் திருக்கோவில் நூதனமாக (புதிதாக) எழுந்தருளிலுள்ள அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனை உடனுறை அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்குட நன்னீராட்டு கும்பாபிஷேகம் பெருவிழா நடைபெற்றது. இவ்விழாவில் இரத்தினகிரி பாலமுருகன் அடிமை சுவாமி, கலவை கமலக்கண்ணி திருக்கோவில் சச்சிதானந்த சுவாமிகள், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் தொழிலதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பு வழிபாடு செய்தனர். மேலும், மாமன்ற உறுப்பினர்கள் ஜெய்சங்கர், மகேந்திரன், சிட்டிபாபு, மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சுகுமாரன், ஆகியோர் கரண்ட் கொண்டனர். இவ்விழாவில் ஹரி கிருஷ்ணன், மோகன்தாஸ், அருணாச்சலம், அன்பு பாஸ்கர், முரளி, சதீஷ், தங்கமணி, தனபால், சேட்டு, ஆர்.அன்பு, ஹரி, கே எம் ஜி ஹரி, ஆசைத்தம்பி, அபிஷேக், ரவீந்திரன், கார்த்திக் உள்ளிட்ட ஊர் பெரியவர்கள், பொதுமக்கள் இளைஞர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இவ்விழாவை கோவில் நிர்வாககுழவினர் அரப்பாக்கம் அன்னை மீரா கல்லூரி குழுமம் ராமதாஸ் சீதாலட்சுமி, தாமோதரன் புவனேஸ்வரி, தாமோதரன் தவமணி மாமன்ற உறுப்பினர் தவமணி தாமோதரன், ஆகியோர் ஏற்பாடு செய்ததிருந்தனர். கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் பக்தர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் சுமார் 3000 பேர்களுக்கு தலை வாழை இலையுடன் கூடிய அறுசுவை உணவு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.





# சிவகங்கை தெற்கு ஒன்றிய திமுக சார்பில் கொடியேற்றி இனிப்பு, உணவு வழங்கி கொண்டாட்டம்

## ஒசெ. ஜெயராமன் தலைமை, கொட்டகுடி பஞ்சவர்ணம், இளைஞரணி வண்டவாசி தங்கம் பங்கேற்பு

சிவகங்கை, நவ.28-

சிவகங்கை மாவட்டம் முழுவதும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் , கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவினை தெற்கு ஒன்றிய திமுக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஒன்றியக்கழக செயலாளர் டாக்டர் ம. ஜெயராமன் தலைமையில் திமுக நிர்வாகிகள் கழக இருவண்ணக் கொடியேற்றியும், பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் அறுசுவை அசைவ உணவு வழங்கியும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இதனையடுத்து சிவகங்கை பேருந்து பணிமனையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் , பையூர் பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் , பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், பனங்காடி சாலை தவழும் மாற்றுத்திறனாளிகள் இல்லமான தாய் இல்லத்தில் அறுசுவை அசைவ உணவு பரிமாறப்பட்டது.

தெற்கு ஒன்றிய செயலாளர் டாக்டர் ம. ஜெயராமன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வண்டவாசி தங்கச்செல்வம், ஒன்றிய துணைச் செயலாளர் கொட்டகுடி பஞ்சவர்ணம் ,மாவட்ட திமுக நிர்வாகிகளான மார்கரேட் கமலா பத்தினாதன், சிங்கமுத்து, தங்கச்சாமி, பொன்னம்பலம், அருமை நாயகம், ஒன்றியக்குழு மேனாள் உறுப்பினர்கள் மாத்தூர் ரமேஷ், கோவானூர் வேல்முருகன், மாரிக்கண்ணன், இளைஞரணி அழகுசுந்தரம், செல்லப்பாண்டி, உசிலங்குளம் விஜய், ஐடி விங் தேவேந்திரன், கொட்டகுடி விஜயா , மாணவரணி துணை அமைப்பாளர் வைரவன்பட்டி வைரமணி , குறிஞ்சி நகர் செந்தில், மெடிக்கல் பாரத், உள்ளிட்ட தெற்கு ஒன்றிய திமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




# கொடைக்கானல் மலைச்சாலையில் பைக் மீது தனியார் பேருந்து மோதி இரண்டு பேர் படுகாயம்

திண்டுக்கல், நவ.28-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல். ராஜபாளையத்தை சேர்ந்த இளைஞர்கள் இருசக்கர வாகனத்தில் கொடைக்கானல் சுற்றுலா வந்து திரும்பிச் சென்றபோது வத்தலகுண்டு சாலையில் வாழகிரி என்னும் இடத்தில் கொடைக்கானல் நோக்கி அதிவேகமாக வந்த மீ உளீஸ்ஹ் என்ற தனியார் பேருந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதியது இந்த விபத்தில் இருசக்கர வாகனத்தில் வந்த இளைஞர்கள் தூக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்தனர். காயமடைந்தவர்களை சகா வாகன ஓட்டிகள் மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் வத்தலகுண்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து தகவலறிந்த தாண்டிக்குடி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனால் வத்தலகுண்டு மலைச்சாலையில் சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. மேலும் கொடைக்கானல் வத்தலகுண்டு மலைச்சாலையில் தனியார் பேருந்துகள் அதிகம் இயக்கப்படுகின்றன இதில் ஒரு சில தனியார் பேருந்துகள் அதிக வேகத்தில் இயக்கப்படுவதோடு எதிரே வரும் கார் மற்றும் இருசக்கர வாகனம் உள்ளிட்ட வாகனங்களை அச்சுறுத்துவது போன்று மலைச்சாலையில் இயக்கப்படுவதாக வாகன ஓட்டிகள் குற்றம் சாட்டுகின்றனர். இதுகுறித்து தனியார் பேருந்து உரிமையாளர்களிடம் புகார் அளித்தும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் அலட்சியம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து வட்டார போக்குவரத்து ஆய்வாளர் அவர்கள் கவனத்தில் கொண்டு மலைச்சாலையில் இயக்கக்கூடிய தனியார் பேருந்துகள் பாதுகாப்பக இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாகன ஓட்டிகள் கோரிக்கை வைக்கின்றனர்.

# ஆஞ்சியோகிராமில் தெரியாத இதய நுண் இரத்த நாள பாதிப்புகளை கண்டறிய தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை அறிமுகப்படுத்தும் அதிநவீன தொழில்நுட்பம்

தஞ்சாவூர், நவ.28-

இதய சிகிச்சையில் ஒரு முன்னோடி முயற்சியாக, இதயத்தின் நுண் இரத்த நாளங்களில் ஏற்படும் குறைபாடுகளைக் கண்டறியும் உலகின் அதிநவீன தொழில்நுட்பத்தை தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை அறிமுகப்படுத்தியுள்ளது.




இது குறித்து நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையின் இதயவியல் சிகிச்சையில் முதுநிலை நிபுணரும், துறைத் தலைவருமான மருத்துவர் பி. கேசவமூர்த்தி கூறுகையில், "ஒருவருக்கு ஆஞ்சியோகிராம் முடிவு முற்றிலும் இயல்பாக இருந்தாலும், 'நுண் நாள ஆஞ்சைனா' அல்லது இரத்த நாளச் சுருக்கம் காரணமாகக் கடுமையான நெஞ்சு வலி அல்லது இரத்த ஓட்டக் குறைபாடு ஏற்படலாம். இதனால்தான் பெண்கள், நீரிழிவு நோயாளிகள் மற்றும் உடல் பருமன் உள்ளவர்களில் 2030% பேருக்கு, ஆஞ்சியோகிராம் பரிசோதனையில் எந்த அடைப்பும் இல்லை என்று வந்தாலும் நெஞ்சு வலி தொடர்கிறது. இதனைக் கண்டறியாமல் விட்டால், இதயத் தசை பாதிப்பு, மாரடைப்பு, இதயச் செயலிழப்பு மற்றும் அரிதாகத் திடீர் மரணம் கூட ஏற்படலாம். வழக்கமான ஆஞ்சியோகிராமில் கண்டறிய முடியாத இந்தப் பாதிப்புகளைக் கண்டறிய, நுண் இரத்த நாள மதிப்பீடு எவ்வளவு முக்கியம் என்பதை இது வலியுறுத்துகிறது," என்றார்.

தொடர்ந்து இதயவியல் துறை நிபுணர்களான மருத்துவர் பி. சபரி கிருஷ்ணன் மற்றும் மருத்துவர் ஏ. சீனிவாசன் ஆகியோர் இது பற்றிக் கூறுகையில், "நவீன இதய சிகிச்சையில், குறிப்பாக இரத்த நுண் நாளச் செயல்பாட்டுக் குறைபாடுகளை மதிப்பிடும்போது, துல்லியமான வகைப்பாடு அவசியம். இந்த நவீன தொழில்நுட்பம், பெரிய தமனிகள் மற்றும் நுண் நாளங்கள் இரண்டிலும் இரத்த ஓட்டத்தை அள விட்டு, எந்த வகையான குறைபாடு உள்ளது என்பதைத் துல்லியமாக அடையாளம் காண உதவுகிறது. இது நோயாளிகளுக்குத் தவறான சிகிச்சையைத் தவிர்க்கவும், அவர்களுக்கு ஏற்ற மிகச் சரியான மருந்தை மருத்துவர்கள் பரிந்துரைக்கவும் உதவுகிறது. சில நேரங்களில் மருந்தே தேவையில்லை என்பதையும் இது உறுதிப்படுத்தலாம். இந்தச் சோதனையானது அனுமானங்களை நீக்கி, ஒவ்வொரு நோயாளிக்கும் அவர்களின் அடிப்படைப் பிரச்சனைக்கேற்ற சரியான சிகிச்சையை உறுதி செய்கிறது," என்று தெரிவித்தனர்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பின் போது, தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையின் துணை மருத்துவக் கண்காணிப்பாளர் மருத்துவர் வி. பிரவீன் அவர்களும் உடனிருந்தார்.

# ஓஎம்ஆர் செயிண்ட் ஜோசப் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, நவம்பர் 28, 2025 அன்று ஐஐசி பிராந்திய சந்திப்பு 2025 நடத்த தயாராகி வருகிறது

சென்னை, நவ.28-

சென்னை ஓஎம்ஆர் செயிண்ட் ஜோசப் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, நவம்பர் 28, 2025 அன்று மதிப்புமிக்க IIC பிராந்திய சந்திப்பு 2025 ஐ நடத்த தயாராகி வருகிறது. இந்த நிகழ்வை இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சிலின் (AICTE) புதுமைப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது. இந்த குறிப்பிடத்தக்க பிராந்திய நிகழ்விற்கான சென்னை மண்டலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்நாட்டின் மூன்று ஹோஸ்ட் மையங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் இந்த நிறுவனம் பெருமை கொள்கிறது. இந்த வளாகம் பிராந்தியம் முழுவதும் உள்ள மிமிசி நிறுவனங்களின் புதுமைப்பித்தர்கள், சுற்றுச்சூழல் அமைப்பை செயல்படுத்து பவர்கள், ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாணவர் தூதர்கள் உட்பட கிட்டத்தட்ட 1,300 பங்கேற்பாளர்களை நடத்த தயாராகி வருகிறது. இந்த நிகழ்வில் புதுமை மற்றும் தொடக்க சுற்றுச்சூழல் அமைப்பின் தலைவர்களுடன் முக்கிய தேசிய மற்றும் மாநில அளவிலான பிரமுகர்களும் ஒன்றுகூடுவார்கள். இந்த நிகழ்ச்சியின் முக்கிய விருந்தினர்களாக AICTE நிதிப் பணியகத்தின் இயக்குநர் திருமதி கரிமா ரோஹேலா, ஸ்டார்ட்அப் டிஎன் இன் இணை துணைத் தலைவர் சி.என்.பிரேம் குமார், எரிக்சனின் மூத்த காப்புரிமை வழக்கறிஞர் மனோஜ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இந்த நிகழ்ச்சி தொடக்க விழாவுடன் தொடங்கும், அதைத் தொடர்ந்து நாடு முழுவதும் உள்ள ஐஐசி ஹோஸ்ட் நிறுவனங்களின் சிறந்த நடைமுறை பகிர்வு மற்றும் நுண்ணறிவுகளைக் கொண்ட மத்திய மெய்நிகர் பதவியேற்பு விழா நடைபெறும். இந்த நிகழ்வில் புதுமை மற்றும் தொடக்கநிலை கண்காட்சிகள், யுக்தி தயாரிப்பு விளக்கக் காட்சிகள், ஐஐசி சுவரொட்டி விளக்கக் காட்சிகள் மற்றும் "உள்ளூர் நிறுவனங்களுக்கான குரல்" ஆகியவற்றை ஊக்கு விக்கும் ஸ்வதேஷ் உத்யாமி பஜார் போன்ற திறந்த வெளி செயல்பாடுகளும் அடங்கும். பங்கேற்பாளர்கள் அறிவுப் பகிர்வு அமர்வுகள், பயிற்சியாளர்களுக்கான பயிற்சி திட்டங்கள், மாஸ்டர் வகுப்புகள் மற்றும் புதுமையான திட்டங்களின் குழு மதிப்பீடுகள் ஆகியவற்றிலிருந்து பயனடைவார்கள். இளம் மனங்களை ஊக்குவிக்கவும், நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும் வடிவமைக்கப்பட்ட ஐஐசி பிராந்திய சந்திப்பு, சிறந்த நடைமுறைகளை வெளிப்படுத்துதல், வளர்ந்து வரும் திறமைகளைக் கொண்டாடுதல் மற்றும் நிறுவன கண்டுபிடிப்பு திறனை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த சந்திப்பை நடத்துவதன் மூலம், செயிண்ட் ஜோசப் தொழில்நுட்ப நிறுவனம், கல்விச் சுற்றுச்சூழல் அமைப்பில் படைப்பாற்றல், தொழில் முனைவு மற்றும் தொழில்நுட்பச் சிறப்பை வளர்ப்பதற்கான அதன் உறுதிப் பாட்டை அங்கீகரிக்கிறது.



# மருதடியில் வேப்ப மரத்தில் பால் வடிந்த அதிசயம்: அம்மன் அருள் இருப்பதாக விழுந்து வணங்கிய மக்கள்

பாடாலூர், நவ.28-

ஆலத்தூர் தாலுகா மருதடி கிராமத்தில் வேப்ப மரத்தில் பால் வடிவதை பார்வையிட்ட மக்கள் அம்மன் அருள் இருப்பதாக கூறி விழுந்து வணங்கினர். பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் வட்டம் மருதடி கிராமத்தில் ஊருக்கு கிழக்கே விஜயகோபாலபுரம் செல்லும் மண் சாலையில் ஒரு மயானம் அமைந்திருக்கிறது. இந்த மயானம் அருகே ஒரு வேப்பமரம் உள்ளது. இந்த மயானம் அருகே விவசாய நிலங்கள் உள்ளன. தினமும் விவசாய நிலத்துக்கு வரும் மக்கள், மயானத்தின் அருகே உள்ள சாலையை பயன்படுத்துவது வழக்கம். அதன்படி இன்று விவசாய நிலத்திற்கு நடந்து சென்ற மக்களுக்கு அதிசயம் காத்திருந்தது.

அதாவது மயானம் அருகே இருந்த வேப்ப மரத்தில் இருந்து திடீரென்று பால் வடிந்து கொண்டிருந்தது. அதாவது வேப்ப மரத்தின் உச்சியில் இருந்து கீழே பால் வடிந்தது. இதை பார்த்த அப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். மேலும் இந்த செய்தி காட்டு தீப்போல பரவ தொடங்கியது. இதையடுத்து வேப்ப மரம் இருந்த பகுதிக்கு மருதடி கிராமம் மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த மக்கள் படையெடுத்து வந்து பார்வையிட்டனர். எப்படி மரத்தில் இருந்து பால் வடிகிறது என்பதை ஆச்சரியமாக பார்த்தனர். இருப்பினும் எப்படி பால் வடிந்தது என்பதை யாராலும், யூகிக்க முடியவில்லை.

இதனால் வேப்பமரத்தில் அம்மன் அருள் இருப்பதாக நினைத்த கிராம மக்கள், அதில் தெய்வம் இருப்பதாக கூறுவதுடன், விழுந்து வணங்கி செல்கின்றனர். வேப்ப மரத்தில் பால் வடிந்த சம்பவம் மருதடி கிராம மக்களிடையே பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.




பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பில்

# தமிழ் தேசிய தலைவர் மேதகு வே.பிரபாகரன் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை, எளிய மக்களுக்கு அன்னதானம் நிகழ்ச்சி நடைபெற்றது

பல்லாவரம், நவ.28-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் தமிழ் தேசிய தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு தொகுதி செயலாளர் சுரேஷ், பொழிச்சலூர் கோபிநாத், அஸ்தினாபுரம் கார்த்திக் தலைமையில் சேகர், சாய்சுரேஷ், கோபால், ஆட்டோ குணாளன், ஏழுமலை முன்னிலையில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சுமார் 300க்கும் மேற்பட்ட ஏழை, எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கினர். இதில் அருண், ரவி, ஜான்சன், பிரகாஷ் உட்பட வாழ்வுரிமை கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மிக கனமழை எச்சரிக்கை: பூண்டி, புழல் ஏரிகளில் இருந்து உபரிநீர் திறப்பு

சென்னை, நவ.28-

மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கையால், பூண்டி, புழல் ஏரிகளில் இருந்து மீண்டும் உபரிநீர் திறக்கப்பட்டுள்ளது.

சென்னை குடிநீர் ஏரிகளில் முக்கிய ஏரியான, பூண்டி ஏரியிலிருந்து வடகிழக்கு பருவமழை காரணமாக கடந்த மாதம் 15ம் தேதி மதியம் முதல் உபரிநீர் திறக்கப்பட்டு வந்தது. பின்னர், பூண்டி ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்யாததால், கடந்த 20ம் தேதி மதியம், பூண்டி ஏரியிலிருந்து உபரிநீர் திறப்பு நிறுத்தப்பட்டது.

இன்று காலை நிலவரப்படி, 3,231 மில்லியன் கனஅடி கொள்ளளவு மற்றும் 35 அடி உயரம் கொண்ட பூண்டி ஏரியின் நீர்இருப்பு 2,751 மில்லியன் கனஅடியாகவும், நீர்மட்ட உயரம், 33.77 அடியாகவும், நீர்ப்பிடிப்பு பகுதிகள் மற்றும் ஆரணி ஆறு அணைக்கட்டிலிருந்து நீர்வரத்து விநாடிக்கு 1,260 கனஅடியாகவும் உள்ளது.

இச்சூழலில், இந்திய வானிலை ஆய்வு மையம், திருவள்ளூர் மாவட்டத்துக்கு மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கையை விடுத்துள்ளதால், இன்று பகல் 12 மணியளவில் பூண்டி ஏரியிலிருந்து மீண்டும் உபரிநீர் திறக்கப்பட்டது. விநாடிக்கு 200 கனஅடி என, திறக்கப்பட்டுள்ள உபரிநீரின் அளவு, மழையின்போது நீர்ப்பிடிப்பு பகுதிகளிலிருந்து வரும் நீர்வரத்தை பொறுத்து படிப்படியாக அதிகரிக்கப்படும் என நீர்வள ஆதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

சென்னை குடிநீர் ஏரிகளில் ஒன்றான புழல் ஏரிக்கு, வடகிழக்கு பருவமழையால் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர்வரத்து உள்ளது. இன்று காலை 6 மணி நிலவரப்படி, 3,300 மில்லியன் கனஅடி கொள்ளளவு மற்றும் 21.20 அடி உயரம் கொண்ட புழல் ஏரியின் நீர்இருப்பு 2,823 மில்லியன் கனஅடியாகவும், நீர்மட்ட உயரம் 19.05 அடியாகவும், நீர்ப்பிடிப்பு பகுதிகளிலிருந்து நீர்வரத்து விநாடிக்கு 35 கனஅடியாகவும் உள்ளது.

இச்சூழலில் திருவள்ளூர் மாவட்டத்துக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. இதனால், இன்று பகல் 12 மணியளவில், புழல் ஏரியிலிருந்து விநாடிக்கு 100 கனஅடி உபரிநீர் திறக்கப்பட்டுள்ளது. மழையின்போது நீர்ப்பிடிப்பு பகுதிகளிலிருந்து வரும் நீர்வரத்தை பொறுத்து படிப்படியாக இந்த அளவு அதிகரிக்கப்படும் என நீர்வள ஆதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஆசிரியை காவியா கொலைக்கு அன்புமணி கண்டனம்: தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு துளியும் இல்லை என வேதனை

சென்னை, நவ.28-

"உலகிலேயே எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் உன்னத ஆட்சி நடைபெறுவதாக முதல்வர் ஸ்டாலின் வீண்பெருமை பேசிக் கொண்டிருக்கிறார்" என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தஞ்சாவூர் மாரியம்மன் கோயில் பகுதியில் பள்ளிக்கூடத்திற்கு சென்ற காவியா என்ற ஆசிரியை கொடூரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

ஆசிரியையை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் பாபநாசத்தைச் சேர்ந்த அஜித்குமார் என்பவர் காவியாவை காதலித்து வந்ததாகவும், ஆனால், காவியாவுக்கு இன்னொரு வருடன் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டதால், ஆத்திரமடைந்த அஜித்குமார் இன்று காலை பள்ளிக்கு சென்று கொண்டிருந்த ஆசிரியையை வழிமறித்து கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்திருக்கிறார். தமிழ்நாட்டில் யாருடைய உயிருக்கும் உத்தரவாதம் இல்லை; யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் படுகொலை செய்யப்படலாம் என்ற பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறது. அந்தக் குற்றச்சாட்டு உண்மை என்பது ஆசிரியை காவியா படுகொலை செய்யப்பட்டிருப்பதன் மூலம் உறுதியாகியிருக்கிறது.

இதே தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலை பள்ளியில் தற்காலிக தமிழ் ஆசிரியராக பணியாற்றி வந்த ரமணி என்ற ஆசிரியை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் தேதி மதன் என்பவரால் பள்ளி வளாகத்திலேயே கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டார்.

அப்போது தமிழ்நாட்டில் ஆசிரியர்களுக்கு எதிரான வன்முறைகளை சகித்துக் கொள்ள முடியாது என்று முதல்வர் மு.க.ஸ்டாலினும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியும் வீரவேசம் காட்டினார்கள்.

ஆனால், சரியாக ஓராண்டு கழித்து தஞ்சாவூரில் இன்னொரு ஆசிரியை படுகொலை செய்யப்பட்டுள்ளார். அதை தடுக்க திமுக அரசால் முடியவில்லை.

தமிழ்நாட்டில் படுகொலைகள் நடக்காத நாளே இல்லை என்று கூறும் அளவுக்கு ஒவ்வொரு நாளும் சராசரியாக 5 படுகொலைகள் நடக்கின்றன. திமுக ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு மட்டும் 7 ஆயிரம் படுகொலைகள் நடந்துள்ளன. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு என்பதைத் தேடினால் கூட கண்டுபிடிக்க முடியவில்லை. குறிப்பாக பெண்களும், குழந்தைகளும் வெளியில் சுதந்திரமாக நடமாட முடியவில்லை.

ஆனால், இது குறித்த கவலைகள் எதுவும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் இல்லை. தம்மைச் சுற்றிலும் உண்மை தடுப்பு வேலியை அமைத்துக் கொண்டு மாய உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் அவர், உலகிலேயே எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் உன்னத ஆட்சி நடைபெறுவதாக வீண்பெருமை பேசிக் கொண்டிருக்கிறார். அவரை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது.

மு.க.ஸ்டாலின் மாய உலகில் இருந்து எதார்த்த உலகிற்கு வர வேண்டும். தமிழ்நாட்டு மக்கள் தினமும் அனுபவிக்கும் கொடுமைகளை பார்க்க வேண்டும். ஆட்சியில் இருக்கப் போகும் இன்னும் சில நாள்களுக்காவது தமிழ்நாட் டில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க மு.க.ஸ்டாலின் நடவடிக்கை எடுக்க வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



■ கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம், மணவாசி ஊராட்சி கோரக்குத்தியில் தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வமுடன் கண்டுகளித்தனர்.





■ சிவகங்கை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அவர்களது தலைமையில் குழந்தை திருமணம் தடுப்பு குறித்து நேற்று ( நவ27) உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்த நிகழ்வை சிவகங்கை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இதில் பள்ளி குழந்தைகள் ஆசிரியர் பெருமக்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ரத்த தான தன்னார்வலர்களுக்கு பாராட்டு விழா: தமிழ்நாடு அறிவியல் இயக்கத்திற்கு பாராட்டு







சிவகங்கை, நவ.28-

சிவகங்கை அரசு கல்லூரி மருத்துவமனை மாவட்ட ரத்த தான அமைப்பு தேசிய ரத்த மாற்றுக் குழு மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்புகள் சார்பில் இரத்ததான தன்னார்வலர்களுக்கான பாராட்டு விழா சிவகங்கை மருத்துவக் கல்லூரி அரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் சீனிவாசன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக சிவகங்கை மாவட்ட ஆட்சியர் பொற்கொடி பங்கேற்று அனைவருக்கும் பாராட்டு சான்றிதழ் கேடயம் வழங்கி சிறப்புரையாற்றினார். மருத்துவக் கல்லூரி ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் தங்கதுரை நிலைய மருத்துவர் முகமது ரபிக் துணை நிலை மருத்துவர் தென்றல் காரைக்குடி இரத்த வங்கி மருத்துவர் மணிமாறன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்ட ரத்த வங்கி மருத்துவ சித்து ஹரி அறிக்கை வாசித்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி மாவட்டப் பொருளாளர் பிரபு ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் மாவட்டச் செயற்குழு உறுப்பினர் வீரபாண்டி இந்திய செஞ் சிலுவை சங்கச் சேர்மன் சுந்தரராமன் துணை சேர்மன் முத்துப்பாண்டி ஆனந்தா கல்லூரி முதல்வர் அருள்தந்தை முனைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் இதயா கல்லூரி முதல்வர் அருள்சகோதரி மெடிலிந்தாமேரி அருள் தந்தையர்கள் வின்சென்ட் அமல்ராஜ் கிளமண்ட்ராஜ் காரைக்குடி நியூஸ் உரிமையாளர் அன்புமதி தன்னார்வலர் குணசேகரன் மற்றும் பல்வேறு தன்னார்வ அமைப்புகள் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள் அரிமா சங்கத்தின் நிர்வாகிகள் அனைவரும் சான்றிதழ்களையும் கேடயங்களையும் பெற்றுக் கொண்டனர்.முன்னதாக மருத்துவர் சர்மிளா திலகவதி வரவேற்றார். மருத்துவர் விஜயலட்சுமி நன்றி கூறினார். ரத்த வங்கி ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் அமைப்பாளர் சூசைராஜ் விழாவினை சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

## உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் 5000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார்




தாம்பரம், நவ.28-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர திமுக மற்றும் பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு காலையில் பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் சிலை அருகில் பகுதி கழக செயலாளர் 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் அவர்கள் தலைமையில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம் எல் ஏ அவர்கள் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 5000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார். உடன் மேயர் க.வசந் தகுமாரி கம லக்க ண்ணன், 5வது மண்டல குழுத்த லைவர் எஸ்.இந்திரன், டி.ஆர். கோபி, ரமணி ஆதிமூலம் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், இரா.ரத்தினகுமார், இரா. செல்வகுமார், மங்களபுரம் பாபு, எல்.பெரியநாயகம், பி.காளியப்பன், மற்றும் மாநகர அணிகளின் அமைப் பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் அனைத்து வட்டங்களில் உள்ள கழக நிர்வாகிகள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி என அனைத்து நிர்வாகிகள், கழக தோழர்கள், பொது மக்கள் பெரும் திரளாக அனைவரும் கலந்து கொண்டனர்

## இளையான்குடியில் SIR பணி சுமை காரணமாக அரசு ஊழியர் கத்தியால் தற்கொலை முயற்சி



இளையான்குடி, நவ.28-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடிதமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்கம், அசாம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு அடுத்தாண்டு சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலை ஒட்டி, அந்தந்த மாநிலக் கட்சிகளும் தேசியக் கட்சிகளும் தேர்தல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. இந்தச் சூழலில், தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கையை கடந்த நவம்பர் 4ஆம் தேதி முதல் தேர்தல் ஆணையம் நடத்தி வருகிறது.

அதன்படி, மாநிலங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் அரசியல் கட்சிகளின் பூத் ஏஜெண்ட்கள் துணையோடு தேர்தல் ஆணைய அதிகாரிகள், வாக்காளர்களை கணக்கெடுக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். எஸ்.ஐ.ஆர் (SIR) படிவங்களை வீடு வீடாக கொடுத்து இடம்பெயர்ந்தவர்கள், ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வாக்காளர்களாக உள்ள வர்கள், படிவங்களை நிரப்பாதவர்கள், ஆவணங்களை வழங்காதவர்கள் ஆகியவற்றவர்களை கண்டறிந்து திருத்தப் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது ஆனால் இதில் உள்ள பெரிய குளறுபடி, இத்தனை அவசரம் அவசரமாக இந்த பணிகளை செய்வதுதான். அதிக மனித உழைப்பும் கால அவகாசமும் தேவைப் படும் ஒரு வேலையை குறுகிய காலத்துக்குள் முடிக்க சொல்லுவது, 'தேர்தல் நிலைய அதிகாரிகளுக்கு (PLO) க்களுக்கு பெரும் சுமையாக மாறியுள்ளது. இந்த SIR வேலைப்பளுவால் சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா அலுவலகத்தில் தேர்தல் பிரிவு அலுவலராக பகவதி ராஜா என்பவர் பணியாற்றி வருகிறார். இவர் தற்போது கூடுதலாக எஸ்.ஐ.ஆர் படிவத்தை பதிவேற்றம் செய்யும் பணியிலும் ஈடுபட்டு வருகிறார். இதனால் கூடுதல் பணி சுமை காரணமாக மன உளைச்சலில் இருந்த பகவதி ராஜா நேற்று அலுவலகத்தில் சிறு கத்தியை கொண்டு தனது கையை இரு முறை வெட்டியுள்ளார். இதனால் அதிகமான ரத்தம் வெளியேறியதை கண்ட சக ஊழியர்கள் அவரை மீட்டு இளையான்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு எட்டு தையல்கள் போடப்பட்டு மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். தற்போது சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எஸ்.ஏ.ஆர் படிவத்தை பதிவேற்றும் பணியில் ஈடுபட்ட அரசு ஊழியர் பணிச்சுமை காரணமாக கைகளை வெட்டிக் கொண்ட சம்பவம் அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.




■ சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்த வந்த கௌதம் பணியிட மாற்றம் செய்யப்பட்டதையொட்டி திண்டுக்கல் மாவட்டம் காவல் குற்றப்பிரிவு ன காவல் கண்காணிப்பாளராக கண்ணன் பணிபுரிந்து வந்த நிலையில் தேவகோட்டை காவல் கண்காணிப்பாளராக கண்ணன் நியமிக்கப்பட்டார். நேற்று அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு காவல் நிலைய அதிகாரிகள் காவலர்கள் மற்றும் சமூக ஆர்வலர் பொதுமக்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர். இதற்கு முன்பு மானாமதுரை காவல் துணை கண்காணிப்பாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது..





## திமுக கோவிலம்பாக்கம் ஊராட்சி சார்பாக உதயநிதியின் பிறந்தநாள் விழா முன்னிட்டு அன்னதானம்

கோவிலம்பாக்கம், நவ.28-

செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம் , கோவிலம்பாக்கம் ஊராட்சியில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வருமான, உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு (நவம்பர் :27) கோவிலம்பாக்கம் போலீஸ் பூத் அருகில் காலை 10 மணிக்கு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரங்கநாதன் மற்றும் 5 வது வார்டு உறுப்பினர், ஆர்.சொக்கலிங்கம் தலைமையில் கழகக் கொடியை ஏற்றி பிறந்தநாள் விழா நடைபெற்றது. சோழிங்கநல்லூர் எம்.எல்.ஏ., எஸ் .அரவிந்த்ரமேஷ் மற்றும் ஒன்றிய கழகச் செயலாளர் கோவிலம்பாக்கம், ஜி.வெங்கடேசன் விழாவை துவக்கி வைத்து பொதுமக்களுக்கு கேக் வெட்டி, இனிப்புகள் கொடுத்து அன்னதானம் வழங்கி சிறப்பாக கொண்டாடினார்கள். உடன் ஒன்றிய பெருந்தலைவர்., சங்கீதா பாரதிராஜன் மற்றும் திமுக கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.






■ மதுரை மாவட்டம் கீழக்குயில்குடி பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 4.49 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சமூக நீதி மாணவிகள் விடுதிக்கான கால்கோள் விழாவினை காணொலி காட்சி மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில்பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜோதிலட்சுமண காமராஜ், உதவி செயற்பொறியாளர் சந்திர போஸ், உதவி பொறியாளர் கார்த்திக், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சண்முக வடிவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## இளையான்குடி பகுதிகளில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்







சிவகங்கை, நவ.28-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய பேரூர் திமுக மற்றும் இளைஞர் அணி சார்பில் தமிழக துணை முதல்வர் மாநில இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா கேக் வெட்டி இனிப்பு வழங்கினர். பின்னர் இளையான்குடி ரகுமானிய பள்ளி, புக்குளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் குழந்தைகளுக்கு நோட் புக் மற்றும் எழுது பொருள்கள் தாயமங்கலம் முத்துமாரி அம்மன் திருக்கோவிலில் அன்னதானம் வழங்கப்பட்டது. இறுதியாக கண்ணமங்கலத்தில் ஒன்றிய கலை இலக்கிய பகுத்தறிவு பாசறை சார்பாக பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன் பேரூர் செயலாளர் PA.நஜுமுதீன் பேரூராட்சி துணை தலைவர் டி.கே. இப்ராஹீம் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து கண்ணமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க முன்னாள் தலைவர் சுப தமிழரசன் மாவட்ட பிரதிநிதிகள் சாரதி, உதயசூரியன் மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கண்ணன், ஒன்றிய துணை செயலாளர்கள் சிவனேசன், ராஜேந்திரன் , சத்தியேந்திரன், இளைஞர் அணி நிர்வாகிகள் பைரோஸ் கான், இபுராஹீம் ஷா, மணி, துரைமுருகன், நாகராஜன் OA.தௌலத், ஜெயினுலாபுதீன், கம்பன் காதர், சத்தியேந்திரன், சேதுராமன், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் மணி மொழியன், அழகேசன், சுரேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மரம் நடுவிழா

திருப்பூர், நவ.28-

திருப்பூர் கிழக்கு மாவட்டம் தாராபுரம் மேற்கு ஒன்றியம் மாணவரணி மற்றும் சின்னக்காம் பாளையம் பேரூர் கழக மாணவரணி நடத்தும் மரம் நடுவிழா துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு காங்கயம் பாளையத்தில் உள்ள அரவணைக்கும் கருணை இல்லத்தில் உள்ள மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது மற்றும் மரம் நடப்பட்டது. எஸ் வி செந்தில் குமார் அவர்கள் தலைமையில் பேரூர் கழக செயலாளர் ர.பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் பேரூர் கழக அவைத் தலைவர் சி சுப்பிரமணியம் மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சன் பாலு மேற்கு ஒன்றிய மாணவர் அணி அமை ப்பாளர் தமிழ்ச்செல்வன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் குகன் பேரூர் ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் ஐடி வின் மாவட்ட துணை அமைப்பாளர் ஆனந்தி மற்றும் பேரூர் இளைஞர் அணி மாணவர் அணி பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161